REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/Thinakaran.lk /ThinakaranLK

2020 நவம்பர் 7 சனிக்கிழமை

தினகரன்
THINAKARAN
தினகரன்

வடக்கின் உதயம்
பக்கம் 09,10

வரு. 88 இல. 265 | November 07,Saturday, 2020 | 16பக்கங்கள் | 30/-

அமரர் டீ.ஏ.ராஜபக்ஷவின் 53ஆவது நினைவு தின நிகழ்வு. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று தங்கல்லையில் உள்ள டீ.ஏ.ராஜபக்ஷவின் உருவச்சிலைக்கு அருகில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதமர் மலரஞ்சலி செலுத்திய போது...

அரசியல் பிரச்சினைகளை நிவர்த்தி செய்து இரணைமடு நீரை யாழ்ப்பாண மக்களுக்கு பெற்றுக் கொடுப்போம்

யாழ். செயலகத்தில் வைத்து சிறிதரன் எம்.பிக்கு அமைச்சர் நிமல் லான்சா பதில்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

யாழ். மாவட்டத்தில் நிலவும் குடிநீர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய இரணைமடு குளத்து நீரை கொண்டு வருவதில் அரசியல் பிரச்சினை இருக்கின்றதென்றால், அவற்றுக்கு தீர்வுகண்டு, இரணை மடு குடிநீர் திட்டத்தை யாழ்.மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுப்போம் என அமைச்சர் நிமல் லான்சா உறுதியளித்தார்.

கிராமிய [illegible] திட்டத்தி[illegible]

CLICK

தெ[illegible]சிப்போர் அவதானம்;

கொரோனா தாக்கத்தின் வேகம் அதிகம்

வயதானவர்கள், நிரந்தர நோயாளிகள் அதிக கவனமெடுத்தல் அவசியம்

லோரன்ஸ் செல்வநாயகம்

கொழும்பில் கொரோனா தாக்கத்தின் வேகம் அதிகரித்துள்ளதால் கொழும்பு மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் அதிகமான சன நெரிசல் காணப்படுவதால் மாடி வீடுகளில் வசிப்போர் தமது வீடுகளிலேயே தங்கியிருக்குமாறும் ஏனைய வீடுகளுக்கு செல்வதை முழுமையாக தவிர்த்துக் கொள்ளுமாறும் சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது.

அத்துடன் வயதானவர்கள் மற்றும் நிரந்தர நோயாளிகளாக உள்ளவர்களை வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பதில் அதிக கவனம் செலுத்துமாறும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவு பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்துள்ளார்.

மருத்துவ நிபுணர் சுதத் சமரவீர எச்சரிக்கை

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசங்களில் சில மரணங்கள் வீட்டிலேயே நிகழ்ந்துள்ளதை சுகாதார அமைச்சு அவதானித்து வருகிறது. பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலும் அதற்கிடையில் வைரஸ் தொற்று நோயாளர்கள் உள்ளதைக் காணமுடிகிறது. அந்தவகையில் வீடுகளுக்கு வந்து செல்வோர் 06

நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்புகள் விரைவில் நிறைவேற்றப்படும்

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உறுதி

நெடுந்தீவு பிரதேசத்திற்கான போக்குவரத்து மற்றும் குடிநீர் பிரச்சினைகளை தீர்த்து வைப்பது தொடர்பாக ஏற்கனவே அமைச்சரவையில் கலந்துரையாடி, அடுத்த வருடத்திற்கான வரவு செலவு திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இன்னும் சில வருடங்களில் நெடுந்தீவு மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேற்றப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் 06

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் வெற்றிகரமாக நடந்து முடிந்த A/L பரீட்சை

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பூஜித் திருப்தி

கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் உயர்தரப் பரீட்சைகளை வெற்றிகரமாக முன்னெடுக்க முடிந்தது என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பூஜித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

கொரோனா நோய் தொற்றாளிகளுக்கு சிகிச்சை அளிக்கும் ஐ.டி.எச் மருத்துவமனையிலும் சில தனிமைப்படுத்தல் முகாம்களிலும் பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் 12ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட உயர்தரப் பரீட்சைகள் நேற்று நிறைவடைந்தன.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்காக 362, 824 பேர் பரீட்சைக்காக விண்ணப்பம் 06

தனிமைப்படுத்தல்களின் போது

தவறான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு ஐந்து வருட சிறை

பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண

தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளின் போது பொலி தகவல்களை வழங்கும் நபர்களுக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை வழங்க முடியும் என பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியுள்ளதாவது, 06

கொரோனா தொற்றை 20 நிமிடங்களில் கண்டறியும் திட்டம் அடுத்த வாரம் முதல்

சுகாதார அமைச்சு ஏற்பாடு என்கிறார் பாக்டர் சமன் ரத்நாயக்க

கொரோனா வைரஸ் தொற்றை மிக விரைவாகக் கண்டறியும் பரிசோதனைத் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இத் திட்டத்தின் மூலம் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியுள்ளதா என்பதை 20 நிமிடங்களில் கண்டறியக்கூடிய வித்தில் திட்டம் அமையும் என சுகாதார அமைச்சின் இராசாயன ஆய்வுகூட சேவைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சமன் ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனை முறை மூலம், பி.சி.ஆர் பரிசோதனை ஊடாக தற்போது தொற்றாளர்களை இனங் காணும் முறையினை விட மிக விரைவில் நோயாளர்களை அடையாளம் காண முடியும் என வைத் தியர் மேலும் குறிப்பிட்டார். 06

ராகமை பொலிஸ் நிலைய OIC க்கு கொரோனா உறுதி

லோரன்ஸ் செல்வநாயகம்

ராகமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு கொரோனா

பஸ் கட்டணம் ஒரு போதும் அதிகரிக்கப்படமாட்டாது

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் திலும்

லோரன்ஸ் செல்வநாயகம்

கயரில்லையென்றும் அவர் தெரி

ஆகக்குறைந்த பஸ் கட்டணமாக ரூ.20

அதிகரிக்க கோருகிறார் கெமுனு விஜேரத்ன

ஆகக்குறைந்த பஸ் கட்டணத்தை 20 ரூபாவாக நிர்ணயிக்கல், சாதாரண சேவை கட்ட

தீபாவளியை வீடுகளில் இருந்து கொண்டாடுங்கள்

TNA தலைவர் சம்பந்தன் வேண்டுகோள்

இளிநொச்சி குறூப் நிருபர்

நாட்டில் வேகமாக பரவி